NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2011

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours | 100 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 7 pages.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions.
4. All answers must be in TAMIL.

---

## SECTION A பகுதி ஒன்று

பாடப் பயிற்சி

கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.

ஒரு குடியானவன் வீட்டில் கோழி ஒன்று இருந்தது. அதற்கு நான்கு குஞ்சுகள் இருந்தன. தாய்க்கோழி குஞ்சுகளை நோக்கி, குழந்தைகளே, நீங்கள் யாரும் தனியே திரியவேண்டாம். பருந்து பார்த்தால் தூக்கிக்கொண்டு போய்விடும் என்று சொன்னது.

ஆனால், ஒரு கோழிக்குஞ்சு மட்டும் அன்னையின் பேச்சைக் கேட்கவில்லை. அது ஒரு நாள் உல்லாசமாக வெளியே உலாவச் சென்றது. பருந்து ஒன்று கீழே பறந்து வந்து அந்தக் கோழிக்குஞ்சைத் தூக்கிச் சென்றது; அதைத் தன் குஞ்சுகளுக்கு இரையாகக் கொடுக்க நினைத்தது.

பருந்து ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்தது. கோழி மரத்தின் அருகே ஓடியது. அது பருந்தைப் பார்த்து, ''பருந்தே, பருந்தே! என் குழந்தையை விட்டுவிடு'' என்று கெஞ்சிக் கேட்டது. அதற்குப் பருந்து, கொடுக்கமாட்டேன். என் குஞ்சுகளுக்கு இரை வேண்டும் என்று சொல்லியது.

கோழி சற்று யோசனை செய்தது. அது கோபமாகத் திரும்பிச் சென்றது. கொள்ளிக் கட்டை ஒன்றை எடுத்து வந்தது. பருந்தைப் பார்த்து, ''என் குழந்தையைக் கீழே விடுகிறாயா? இல்லாவிடில் உன் குஞ்சுகள் இருக்கும் மரத்தின் அடியில் நெருப்பு வைக்கட்டுமா?'' என்று கேட்டது. அப்போதுதான் பருந்துக்கும் புத்தி வந்தது. அது பேசாமல் கோழிக் குஞ்சைக் கீழே விட்டுவிட்டது. கோழி கொள்ளிக்கட்டையைத் தூர எறிந்துவிட்டுத் தன் குஞ்சை அழைத்துக்கொண்டு வீடு திரும்பியது.

IEB Copyright © 2011

1.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை நிரப்புக:

1.1.1 ஒரு _ _ _ _ _ _ _ _ வீட்டில் கோழி ஒன்று இருந்தது. (1)
1.1.2 _ _ _ _ _ _ _ _ யாரும் தனியே திரியவேண்டாம். (1)
1.1.3 பருந்து ஒரு _ _ _ _ _ _ _ _ கிளையில் உட்கார்ந்தது. (1)
1.1.4 _ _ _ _ _ _ _ _ சற்று யோசனை செய்தது. (1)

1.2 சரியான விடை எழுதுக:

1.2.1 கோழிக்கு எத்தனை குஞ்சுகள் இருந்தன? (2)
1.2.2 தாய்க்கோழி குஞ்சுகளிடம் என்ன கூறிற்று? (2)
1.2.3 ஒரு குஞ்சு மட்டும் என்ன செய்தது? (2)
1.2.4 அன்னையின் பேச்சைக் கேட்காத குஞ்சுக்கு என்ன ஆனது? (2)
1.2.5 தாய்க்கோழியிடம் பருந்து என்ன கூறிற்று? (2)
1.2.6 யோசனை செய்தபின் கோழி எதை எடுத்து வந்தது? (2)

1.3 எது உண்மை, எது உண்மை அல்ல என்று எழுதுக:

1.3.1 ஒரு குடியானவன் வீட்டில், வாத்து ஒன்று இருந்தது. (1)
1.3.2 கோழிக்கு ஆறு குஞ்சுகள் இருந்தன. (1)
1.3.3 பருந்து கோழிக்குஞ்சைத் தூக்கிச் சென்றது. (1)
1.3.4 கோழி, கொள்ளிக் கட்டை ஒன்றை எடுத்து வந்தது. (1)

1.4 ஒருமைக்குப் பன்மை தருக: (எ.டு - கோழி : கோழிகள்)

1.4.1 வீடு (1)
1.4.2 குஞ்சு (1)
1.4.3 மரம் (1)
1.4.4 பருந்து (1)
1.4.5 புறா (1)
1.4.6 ஈ (1)
1.4.7 சிங்கம் (1)
1.4.8 குழந்தை (1)
1.4.9 கட்டை (1)
1.4.10 பூ (1)

IEB Copyright © 2011 

1.5 கீழ்வரும் பகுதியைப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக:

**கரை சேர்ந்த கமிடி**

'யார் இவர்கள்? இவர்களுக்கு இங்கு என்ன வேலை?' என்ற பல கேள்விகள் கமிடியின் மனத்தில் எழுந்தன. இதுபோன்ற உருவங்களைக் கமிடி தன் வாழ்நாளில் பார்த்ததே இல்லை. அவன் பார்த்த உருவங்கள் ஒவ்வொன்றும் சுமார் மூன்று மீட்டர் உயரம் இருந்தன. அவற்றின் நெற்றியில் ஒரே ஒரு கண் மட்டும் இருந்தது. தலையில் ஒரு கொம்பு முளைத்திருந்தது. அவற்றின் நீண்ட கோரமான பற்களைப் பார்ப்பதற்கே அவனுக்குப் பயமாக இருந்தது. 'இவை பார்ப்பதற்கு மனிதர்களைப் போலவே இருக்கின்றனவே! ஆனாலும், ஏன் இவ்வளவு பயங்கரத் தோற்றத்துடன் காணப்படுகின்றன?' என்று கமிடி தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

1.5.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

1.5.2 மேற்காணும் பகுதியிலிருந்து <u>நான்கு</u> பெயர்ச்சொற்கள் எழுதுக. (4)

1.5.3 வினைச்சொல் என்றால் என்ன? (1)

1.5.5 மேற்காணும் பகுதியிலிருந்து <u>மூன்று</u> வினைச்சொற்கள் எழுதுக. (3)

1.6 ஆண்பாலுக்குப் பெண்பால் எழுதுக: (எ.டு – சிறுவன் : சிறுமி)

1.6.1 மகன் (1)

1.6.2 பணக்காரன் (1)

1.6.3 திருடன் (1)

1.6.4 தம்பி (1)

1.6.5 ஒருவன் (1)

1.6.6 அண்ணன் (1)

1.7 பிரித்து எழுதுக:

1.7.1 புதியபெட்டி (1)

1.7.2 இரண்டாயிரம் (1)

1.7.3 இவனுக்குக்கொடு (1)

1.7.4 பூக்கடை (1)

1.7.5 அவனைப்பார் (1)

1.7.6 பெயர்ச்சொல் (1)

IEB Copyright © 2011

1.8 சேர்த்து எழுதுக:

1.8.1 அதை + செய் (1)
1.8.2 மலரை + பறி (1)
1.8.3 ஆட்டு + குட்டி (1)
1.8.4 புதிய + வீடு (1)
1.8.5 மொழி + அழகு (1)
1.8.6 உயிர் + எழுத்து (1)

1.9 எண்களை எழுத்துகளால் எழுதுக: (எ.டு - 10 = பத்து)

1.9.1 7 = (1)
1.9.2 14 = (1)
1.9.3 30 = (1)
1.9.4 100 = (1)

1.10 கீழ்வரும் எழுத்துகளையும் சொற்களையும் வரிசையாய் எழுதுக:

1.10.1 ஈ ஆ ஏ ஓ ஔ ஐ ஊ (1)
1.10.2 இவன் உயிர் அம்மா ஆசை ஈகை (2)

1.11 எதிர்ச்சொல் தருக: (எ.டு - அங்கே : இங்கே)

1.11.1 சிறிய : (1)
1.11.2 மேல் : (1)
1.11.3 இன்பம் : (1)
1.11.4 அது : (1)

1.12 சரியாய் எழுதுக: (எ.டு - அபாப் = அப்பா)

1.12.1 ள்பளி = (1)
1.12.2 பவைற = (1)

**70 marks**

## SECTION B பகுதி இரண்டு

1. <u>கொன்றை வேந்தன் விளக்கக் கதை</u>

1.1 ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று கொன்றை வேந்தன் தொடரின் படி, <u>இரு நண்பர்கள்</u> என்ற கதையை எழுதுக (8)

1.2 <u>முடிவு செய்க:</u>

1.2.1 அன்னையும் பிதாவும் ........................................................ (1)

1.2.2 ........................................................................சாலவும் நன்று (1)

1.2.3 உண்டி சுருங்குதல் ........................................................ (1)

1.2.4 ........................................................................மூவா மருந்து (1)

2. <u>திருக்குறள்</u>

<u>முடிவு செய்க:</u>

2.1 அகர முதல எழுத்தெல்லாம்........................................................ (2)

2.2 கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவின் ................................... (2)

2.3 மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்............................................ (2)

2.4 வேண்டுதல் வேண்டாமையிலானடி................................................. (2)

IEB Copyright © 2011

3. <u>குயில் பாட்டு</u>

கீழ் வரும் வரிகளைப் படித்து சரியான விடை தருக.

Study the lines below and answer the questions that follow:



முன்போல் மறைத்துநின்றேன்; மோகப் பழங்கதையைப்
பொன்போற் குரலும் புதுமின்போல் வார்த்தைகளும்
கொண்டு, குயிலாங்கே கூறுவதாம்: நந்தியே,
பெண்டிர் மனதைப் பிடித்திழுக்கும் காந்தமே!
காமனே! மாடாக் காட்சிதரும் மூர்த்தியே!
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ?
மானிடருந் தம்முள் வலிமிகுந்த மைந்தர் தமை
மேனியுறுங் காளையென்று மேம்பா டுறப்புகழ்வார்.



| | | |
|---|---|---|
| 3.1 | குயில் பாட்டை எழுதியவர் யார்? | (1) |
| 3.2 | இந்தப் பாட்டு ஏன் குயில் பாட்டு என்று அழைக்கிறோம்? | (1) |
| 3.3 | மேற்கண்ட வரிகளில் எந்த விலங்கைப்பற்றி எழுதியுள்ளது ? | (1) |
| 3.4 | மாடன் யார்? | (1) |
| 3.5 | எந்தப் பறவையைப் பற்றி எழுதியுள்ளது ? | (1) |
| 3.6 | மறுப்பிறப்பில் குறங்கன் எவ்வாறு பிறந்தான்? | (1) |
| 3.7 | சின்ன குயிலியைப் பற்றி 4 – 5 வரிகள் எழுதுக. | (4) |

**30 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2011